DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No. 294/2019

PROSECUTION WITNESS L.W.8 /P.W.7

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | தண்டபாணி | Caste | : | |
| Father's Name | : | பரமசிவம் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

1,2 எதிரிகள் ஆஜர். 3-ம் எதிரி ஆஜர் இல்லை. 3-ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு - 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 29.11.2023.

**முதல் விசாரணை**

1. நான் ஈரோடு அரசு மருத்துவமனை காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன்.

2. 04.11.2016 ம் தேதி காலை 10.00 மணிக்கு ஈரோடு வடக்கு காவல்நிலையம் தலைமைக் காவலர் 1414 நாகராஜ் என்பவர் பதிவு செய்த குற்ற எண்.789/17 இதச 147, 294 (b), 427, 506(i) வழக்கின் முதல் தகவல் அறிக்கையை பெற்று, அதே தேதியில் 11.15 மணிக்கு சம்பவ இடத்தை சாட்சிகள் கைலாபதி, கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார்செய்தேன். **(பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. சாட்சிகள் கலையரசி, வெங்கடாச்சலம், ராமசாமி, மருதாச்சலம், ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வாக்குமூலம் பதிவு செய்தததில்

வாதியானவர் 5 நபர் மீது குற்றம் சாட்டியுள்ளார். சம்பவ இடத்தில் சாட்சிகளை விசாரித்ததில் இருந்து எதிரி 4 அய்யாவு, 5 ம் எதிரி அய்யாவு மருமகன் மற்றும் 6 ம் எதிரி ராமகிருஷ்ணன் சம்பவ இடத்தில் இல்லை என்று எனது புலன்விசாரணையால் தெரியவந்ததால் அவர்களை இவ்வழக்கில் இருந்து நீக்கம் செய்து சட்டபிரிவு மாற்றுதல் அறிக்கையை தாக்கம் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **(சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பார்வை மகஜர் சாட்சிகள் கைலாபதி, கார்த்திகேயன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகள் முன் ஜாமீன் பெற்றுக்கொண்டது தெரியவந்தது. 21.02.2018 ம் தேதி சிவன்மலை, சரஸ்வதி, பிரபு ஆகியோர் மீது இதச 294(b), 427, 506(i) குற்ற இறுதிஅறிக்கை தாக்கல் செய்தேன்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. சுமார் 5 மாதங்கள் கழித்து தான் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். சம்பவ தேதியில் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் சுவர் இடிக்கப்பட்டதாகவோ, இடிக்கப்பட்ட பொருள்கள் இருந்ததாகவோ குறிப்பிடவில்லை என்றால் ஆமாம். கலையரசி மற்றும் வெங்கடாச்சலம் ஆகியோர் சம்பவத்தை வீடியோ எடுத்ததாக கூறியுள்ளனர் என்றால் ஆமாம். அந்த வீடியோவை ஒப்படைத்ததாக மேற்கண்ட சாட்சிகள் வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் ஆமாம். புகைப்படம் எடுத்து ஒப்படைத்ததாக மேற்கண்ட சாட்சிகள் வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் ஆமாம்.

2. சுவருக்கான சேதம் ரூ.3000/- என்பதற்கு வல்லுநரின் அறிக்கை பெற்றுள்ளேனா என்றால் இல்லை. சாட்சிகள் கூறியதன் அடிப்படையில் தான் ரூ.3000/- என கூறுகிறேனா என்றால் ஆமாம். குறுந்தகட்டில் உள்ள நபர்கள் எதிரிகள் தான் என்பதற்கு வல்லுநர் அறிக்கை பெறவில்லை என்றால் ஆமாம். சுவர் இரண்டு தரப்பினருக்கும் பாத்தியப்பட்டது என்ற பிரச்சனை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சம்பவம் நடந்ததாக கூறும் பொதுஇடம் இல்லை எனவும் தனியாருக்கு பாத்தியப்பட்டது என்றால் ஆமாம்.

3. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அன்றே மூன்று நபர்களான 4 முதல் 6 எதிரிகள் மீது தவறாக புகார் அளிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிந்துகொண்டேனா

என்றால் ஆமாம். பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உரிமையியல் வழக்கு நிலுவையில் உள்ளது எனவும், அதனை வலுப்படுத்த பொய்புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சொன்ன தேதி நேரத்தில் எதிரிகள் சுவற்றை இடிக்கவில்லை எனவும், அதுபோல் ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் சரிவர புலன்விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறாக குற்ற இறுதிஅறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.